# கருணை
# KARUNAI

தமிழ் & ஆங்கிலம்


| திருவள்ளுவராண்டு 2053<br>1st January 2022 | மதுரை<br>Madurai | வருட சந்தா-Annual<br>Subscription Rs. 100/- | மலர்-12<br>இதழ்-2 |
| --- | --- | --- | --- |

கடவுள் நம்பிக்கை மற்றும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை காலாண்டு இதழ்




## சத்திய ஞான சபை
## வள்ளலார் வழியில் வழிபாடு-
## தெற்கு திக்கு நோக்கியே.


*கதவுகள் திறப்பதற்கே!*
*எட்டு வாசல் கதவுகள் திறக்கப்பட வேண்டும்.*
*கோரிக்கையை நிறைவேற்றுமா ???*
*இ.ச.அ.ஆ.துறை?*

சுத்த சன்மார்க்கக் கொள்கை-தனிநெறி
உள்ளது உள்ளபடி உலகில் விரைந்து
வெளிப்படுத்தும் பணியில் தன்னை
முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள இருக்கும்,

**எங்கள் அய்யா,**

‘அருட்பெருஞ்ஜோதி **அருள்அடிகள்’**

**வருக! வருக!!**



இவண்

***ச.சசாங்கன்***
வள்ளலார் அறிவியல் மையம்,
மதுரை.

***கே.எஸ்.சகாதேவராஜா***
வள்ளுவர் வள்ளலார் மன்றம்

மற்றும்

***ஜி.சுப்பிரமணியன்***
வள்ளலார் மன்றம்,
குறிஞ்சிப்பாடி.

***செங்கான், கண்ணன்,***

***ரவிச்சந்திரன்,***

***சரவணக்குமார்,***

***தாயுமானவர், மோகன்,***

***தீபக், பாலாஜி,***

***செந்தில்.***

# கருணை - KARUNAI

தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2053
1st Jan 2022
வருட சந்தா ரூ. 50 மட்டும்

கடவுள் நம்பிக்கை,
ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்
*Volume : 12 Issue : 2*



உரிமை மற்றும் பதிப்பாளர்:
திருமதி. இராமலெட்சுமி இளங்கோ M.A.,
செல் : 8778874134

ஆசிரியர்:
திரு. A.G.சந்திரமோகன்
செல் : 9442038770

உதவி குழு:-
திரு. G.சுப்பிரமணியன்
செல் : 9842818242
திரு. M.கண்ணன் B.L.,
திரு. S.சசாங்கன்
திரு M. ரவிச்சந்திரன்

கௌரவ ஆலோசகர்:
தயவு.திரு. P.சுப்பாராஜ் M.A.B.L.
திரு சாதுசிவராமன்
திரு H. தாயுமானசுவாமி B.L.,



**Place of Publication**
Karunai Sabai Salai Buld,
Grace Hall
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.


## தலையங்கம்

உலகில் தோன்றியுள்ள எல்லா சமயங்களும், எல்லா மதங்களும் எல்லா மார்க்கங்களும் மக்களுக்கு நல்லதையே போதிக்கிறது. எவர் ஒருவரையும் தாழ்வாக கருதக் கூடாது. எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவித்தல் என்பது சுத்த சன்மார்க்கத்தின் சாதனம். இம்மார்க்கமே 'ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையை' விரைந்து பரவ வைக்கும்.

அனைவரும் வடலூர் வாரீர்.
உண்மைப்பொதுநெறி
தெரிந்துகொள்ள.

நன்றி

**- ஏபிஜெ அருள்**

**கருணை இதழின் இனிய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

# சத்திய ஞான சபையில் வழிபாடு

-APJ ARUL

திருவருட்பிரகாச வள்ளலார் கண்ட உண்மை பொதுநெறி “சுத்த சன்மார்க்கத்தில” சொல்லப் பட்டுள்ள வழிபாடு முறை என்ன? என நல்ல விசாரணையை வள்ளலாரின் கட்டளை அறிவிப்பு படிகாண்போம்.

**உரைநடைப்பகுதி பக்கம் 349 :-**

**கிழக்கு திசை நோக்கி:** தியானம் செய்கின்றது போகசித்தியைப் பெறுகிறதற்கு

**மேற்கு திசை :** சொர்ணசித்தியை பெறுகிறதற்கு.

**தெற்கு திசை :** சாகாக்கலையை (நித்திய தேகத்தையும் ஞான சித்தியையும்) பெறுகிறதற்கு.

**வடக்கு திசை :** சித்த சுத்தியைப் பெறுகிறதற்கு.

நிற்க அன்பர்களே

என் மார்க்கம் இறப்பையொழிக்கும் மார்க்கம் என் மார்க்கத்தில் “சாகாகல்வியை” தவிர வேறு ஒன்றுமில்லை என்கிறார் வள்ளலார்.

ஆக

சுத்த சன்மார்க்கில் வழிபாட்டுத் திசை எதுவென்றால் தேற்கு திக்கை நோக்கித் தியானம் செய்தல் வேண்டும்.

இதன் அடிப்படையில் தான் வள்ளலார் நிறுவிய சத்திய ஞான சபை அமைந்துள்ளது. சத்திய ஞான சபையின் முன் வாசல் தெற்கு திசை நோக்கி இருப்பதை காணுங்கள். முன்வாசல் நம்முகம் ஆகும். சத்திய ஞான சபை பற்றி வள்ளலார் என்னச் சொல்கிறார் எனப்

**பார்ப்போம் கடவுளின் உண்மை நிலை காணவேண்டும் உண்மை கடவுளின் அருள் பெற்று மரணமில்லா பெருவாழ்வில் வாழ்வதே சுத்த சன்மார்க்கத்தின் லட்சியம் ஆகும். கடவுளின் உண்மை, புறத்தில் நம் அறிவை கொண்டு காண்பதாக இல்லை.**

**அப்படி என்றால், கடவுளின் நிலையை நம்மால் எங்ஙனம் காணமுடியும?.**

**இதோ வள்ளலாரின் பாடல் வரிகள்**

**பாடல்: 1**

”பங்கமோர் அணுவும் பற்றிடா அறிவால் பற்றிய
பெற்றியார் உளத்தே தங்குமோர் சோதித்தனி ப்பெருங்
கருணைத் தரந்திகழ் சத்தியத் தலைவா
துங்கமுற் றழியா நிலைதரும் இயற்கைத் தொன்மையாம்
சுத்தசன் மார்க்கச் சங்கநின் றேத்தும் சத்திய
ஞான சபையவா அபயவாழ் வருளே.”

**பாடல்: 2**

”சத்திய ஞான சபை**என்னுள்** கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்
நித்திய ஞான நிறையமு துண்டனன்
நிந்தை உலகியற் சந்தையை விண்டனன் அற்புதம்”

**ஆக,**

**கடவுளின் நிலை காண்பது நம் உள்ளத்திலே (அகம்) என்றும், உள்ளத்து இடமே சத்திய ஞான சபை என்பதையும் நான் தெரிந்துக் கொள்ளவேண்டும். அப்படி என்றால், வடலூாரில் சத்திய ஞான சபை என்பது என்ன?**

**தான் தன்னுள் கண்ட திருகாட்சிகளை புறத்திலும் எடுத்துக்காட்டி, தனக்கு ஏற்பட்ட விருப்பம் போல், எல்லோருக்கும் ஆசை உண்டாகி அகத்தினுள் சுத்த**

மெய்ஞ்ஞான யோக செய்ய வைக்கும் வள்ளலாரின் கருணை எனலாம். ஆக, வடலூர் வந்து, வள்ளலாரின் தனி நெறி தெரிந்து, வழிபாட்டு முறை அறிந்து, தியானித்து அனுபவம் பெறுதல் வேண்டும்.

மேலும் ஆதாரப் பாடல்கள்.

1) வருவார் அழைத்து வாடி'....

2) என்பாற் கனிப்பொடும்'..

3) என்பால் வருபவர்க்'.. எனத்தொடங்கும் பலப்பாடல்கள் உள்ளது.

ஆக, வடபால் நோக்கி வந்து தென்திக்கு நோக்கி பார்த்து தியானிக்க வேண்டும்.

அன்பர்களே

இந்நிலையில் உங்களின் மேலான விசாரணைக்கு நான் வைத்து வேண்டுவது யாதெனில் வடலூர் விரைந்து வாருங்கள், பார்வதிபுரத்து வெளி வடதிசை நோக்கி சென்று, அங்கிருந்து, தென் திசை நோக்கி தியானம் செய்தலே சுத்த சன்மார்க்கத்திசை வழிபாடு ஆகும்.

ஆக,

**<u>சத்திய ஞான சபையில் நாம் செய்ய வேண்டிய வழிபாட்டு முறை:</u>**

முதலில்,

சத்திய ஞான சபை என்பது வள்ளலார் "தன்னுள் கண்ட திருக்காட்சி" என்பதை உறுதிப்படுத்திக் கொண்டோம். வள்ளலார் போல் நாமும் கடவுள் நிலைகாண,

சத்திய ஞான சபையின் முன்வாசல் நின்று, அகத்தில் நாம் காணவுள்ள, அக்காட்சியை மறைக்கும்

திரைகள் பற்றிய விளக்கம், சொல்ல வேண்டிய மகா மந்திரம், மெய்ஞ்ஞான யோகத்திற்கான வழி காணுதல் இவை குறித்த விளக்கத்தினை தெரிந்துக் கொள்ள வந்துள்ளேன் என திருவருட்பிரகாச வள்ளலாரை வணங்கி துணை கொண்டு உண்மைக் கடவுளின் நிலை அறிய ஆசை கொண்டு நிற்க வேண்டும்.

சம்மதம் (விளக்கம்) பெற்றதை உறுதிப்படுத்திக் கொண்டு, வடக்கு திசை பெருவெளிக்கு வாருங்கள், அங்கு இருந்துக்கொண்டு தெற்குதிசை நோக்கி தியானம் செய்யுங்கள்.

நிற்க

இதுவே சத்திய வழிபாடு என்பதை தங்களுக்கு ஆதாரங்களுடன் இங்கு சமாப்பித்துள்ளேன். இப்பொழுது பாருங்கள், வடதிசையில் பல ஏக்கர் நிலம் (பெருவெளி) உள்ளது இந்த தெற்கு திசை தியானத்திற்கே

நன்றி: -APJ ARUL

# எட்டுவாசல் கதவுகள் திறப்பதற்கே எங்களின் கோரிக்கை வள்ளலாரின் கட்டளைபடியே -APJ ARUL

திருவருட்பிரகாச வள்ளலார் 19-ம் நூற்றாண்டில் உலகில் வெளிப்பட்டிருந்த சாதி சமய மத மார்க்கங்களை கடந்து ஒரு புதிய மார்க்கம் "**சுத்த சன்மார்க்கத்தை**" கண்டு வெளிப்படுத்தினார்கள்.

அவரது வடலூர் நிலையங்களில் பல வருடங்களாக நடைபெற்று வந்த **"முரண்பாடான"** செயல்களை மேதகு நீதிமன்றத்தில் வழக்கிட்டு திரு.ஆணையரின் பல ஆணையால் தடுக்கப்பட்டன. **இன்று நல்ல முறையில், அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் இயங்கி வருகிறது.**

இந்நிலையில் தங்களிடம் இரு கோரிக்கைகளை பணிந்து சமர்ப்பித்து வேண்டுவது யாதெனில், தாங்கள் எங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்றி தர வேண்டுகிறோம்.

**முதல் கோரிக்கை:**

இனி எல்லா நாட்களிலும் சத்திய ஞான சபையில் ஜோதி தரிசனம் காட்டப்பட வேண்டும். இது நிறுவனரான வள்ளலாரின் நோக்கமும், விருப்பமும் ஆகும். இதோ அவரின் பாடல்கள் சில: (பாடல்களில் தினந்தோறும் உள்ளது)

பாடல்:-

"**சித்திபுரத்தே தினந்தோறும்** சீர்கொளருள்
சத்திவிழா நீடித் தழைத்தோங்க - எத்திசையில்
உள்ளவரும் வந்தே உவகை உறுகமதத்
துள்ளல் ஒழிக தொலைந்து".

பாடல்:-

"**கைக்கிசைந்த** பொருள்எனக்கு வாய்க்கிசைந்துண் பதற்கே
காலம்என்ன கணக்கென்ன கருதும்இடம் என்ன
மெய்க்கிசைந்தன் றுரைத்ததுநீர் சத்தியம் சத்தியமே
விடுவேனோ இன்றடியேன் விழற்கிறைத்தேன் அலவே
செய்க்கிசைந்த சிவபோகம் விளைத்துணவே இறைத்தேன்
**தினந்தோறும்** காத்திருந்தேன் திருவுளமே அறியும்
மைக்கிசைந்த விழிஅம்மை சிவகாம வல்லி
மகிழநடம் புரிகின்றீர் வந்தருள்வீர் விரைந்தே".

**மேலும் உபதேசக் குறிப்பில்**

**ஆதாரம்: 25.11.1872ல் வெளியிட்ட சத்திய ஞான சபை விளம்பரம்.**

**"…. தருணம் தொடங்கி வந்து, வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிய …" என கட்டளை உள்ளது.**

**வள்ளலார் நிறுவிய "சத்திய ஞான சபையில;" மாத பூச நாளிலும், ஆண்டு தைப்பூசத்திலும் மட்டுமே திரைகள் நீக்கி ஜோதி தரிசனம் காட்டப்பட்டு வருகிறது.**

**மேலும் 22.10.1873 மாக பேருபதேசத்தில் …..**

**"… இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்குண்மை தெரிவிக்க வேண்டும் என்கின்ற முயற்சியுடனிருந்தால் தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்…" "இடைவிடாது நன்முயற்சியின் பயிலுதல் வேண்டும்…"**

**ஆம், வள்ளலார், நம் ஒவ்வொருவரும் அகத்திலே நன்முயற்சி எடுக்க, தெரியப்படுத்தும், பயில வைக்கும் ஓர் உன்னத அறிவு சபையே "சத்திய ஞான சபை" ஆகும்.**

**எனவே எல்லா நாட்களிலும் (மற்றக் கோயில் போன்று) காலை முதல் இரவு வரை திறந்து வைத்து**

தினமும் 6 முறை திரை விளக்கம் சொல்லி, மெல்லென துதி செய்து, உண்மையை மக்களுக்கு விளக்கி காட்ட வேண்டும்.

விண்ணப்பங்கள், திருஅகவல், 28 பாசுரங்கள், மகாமந்திரம் இவை மெல்லென துதி செய்தலில் இருக்க வேண்டும்.

## இரண்டாவது கோரிக்கை:

**மாத பூசத்திலும் மற்றும் ஆண்டு பூசத்திலும்** அனைத்து **எட்டுவாசல்களையும் மற்றும் 16 ஜன்னல்களையும்** திறந்து ஜோதி ஒளி காட்ட வேண்டும். எங்கும் பரிபூரணமாக விளங்கும் கடவுளின் உண்மையை விளக்குவது வள்ளலாரின் லட்சியம் விருப்பம் ஆகும். கதவுகள் திறப்பதற்கே. அதன் பொருட்டே கதவுகள், ஜன்னல்கள் வள்ளலார் வைத்துள்ளார் என்பதை விளக்க வேண்டிய தேவை இல்லை.

இக்கோரிக்கையை பல வருடங்களாக முன் வைத்து வருகிறோம். 2017 மற்றும் 2018-ல் மனுக்கள் அனுப்பி உள்ளோம். நடவடிக்கை இதுவரை இல்லை. மேதகு அரசு கருணையுடன் பரிசீலிக்க வேண்டுகிறோம். சத்திய ஞான சபையின் ஜோதி பீடத்தில் நான்கு பக்க கண்ணாடியை தான் வள்ளலார் அமைத்து அனைத்து திசையிலும் ஜோதியை காட்டினார்கள். இங்ஙனம் செய்யப்படுமே யானால், உன்னத உயர்வான செய்தியை அதாவது கடவுள் நம்பிக்கை நெறியில் சாதி சமய மத பேதமற்ற "ஓர் உண்மை பொது நெறியை" உலகிற்கே தெரிய வந்து ஆன்மநேயம் வளரும். அனைத்து பெருமையும் இவ்வரசுக்கே சேரும். விரைந்து செயல்படுத்துங்கள்.

**வள்ளலாரின் தனிநெறியை விரைந்து வெளிப்பட செய்ய வேண்டியது:-** -APJ. ARUL

## 19-ம் நூற்றாண்டில், வள்ளலார், கடவுள் அருளால், கண்டு வெளிபடுத்திய "சமரச சுத்த சன்மார்க்கம்" இன்று வெளிப்படும் நல்ல தருணம்.

-ஏ.பி.ஜெ.அருள்

**"எல்லா சமயங்களுக்கும்**
**எல்லா மதங்களுக்கும்**
**எல்லா மார்க்கங்களுக்கும்"**

உண்மை பொது நெறியாக விளங்கும் சுத்த சன்மார்க்கம் சார்ந்து தொடங்கப்பட்ட சுத்த சன்மார்க்கத்தார்களின் சங்கங்கள், சபைகள், சாலைகள் இவை அனேகம். மேற்படி சுத்த சன்மார்க்கச் சங்கம், சபை சாலை அமைப்புகள் ஒருமித்து, நல்ல விசாரணைக்கும், வள்ளலாரின் தனிநெறி விரைந்து வெளிப்படும் நற்செய்கை நடவடிக்கைகளுக்கும், ஒன்றிணைவோம் வாரீர்...... வாரீர்.....

மேதகு தமிழக அரசும் வடலூரில் திருவருட்பிரகாச வள்ளலார் பெயரில் "சர்வதேச மையம்" நிறுவ உள்ள இத்தருணம் நல்ல தருணமே.

- சாதி சமயம் மதம் பொய்
- நாத்திகம் சொல்கின்றவர்தம் நாக்கு முடைநாக்கு எனக்கண்டு,
- எல்லா உயிர்களிடத்தும் தயவு கொண்டு,
- இறவாமல் பேரின்ப பெருவாழ்வில் வாழ்ந்து,

➢ அண்ட திறங்கள் அனைத்தும் அறிய,

கண்ட வள்ளலாரின் உண்மை பொது நெறியாம் சுத்த சன்மார்க்கத்தில்

"ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டும் ",

அதற்கு,

➢ ஆசாரங்கள் எதுவும் இல்லா கருணை மட்டுமே சாதனம், என்கின்ற புதிய கடவுள் கொள்கையே "சுத்த சன்மார்க்கம்"

➢ "சர்வதேச மையம்" அமைத்த அரசுக்கு பாரட்டுதலுடன் நன்றியும் மற்றும், ஆதரவும் நல்கி வேண்டிய பணிகளும் செய்யும் கடமையிலும்,

➢ வள்ளலாரின் உண்மை பொது நெறி விரைந்து உலகிற்க்கு வெளிப்பட வைக்கும் கோரிக்கைகளை மேதகு அரசிடம் அளித்திடும் நற்செய்கையிலும்,

நாம் ஒருமித்து இணைந்து செயல்பட வேண்டியது, இதுவே நல்ல தருணம்.

**ஆக,**

<u>மேதகு அரசுடன் வைத்து வேண்டப்படும் கோரிக்கைகள் விபரம்</u>:-

1. **சத்திய ஞான சபை வழக்கு (அப்பில் இன்னும் நிலுவையில்) இது மிக முக்கியம், அரசு தனி கவனம் வேண்டும்.**

2. தனி நெறி (உண்மை பொது நெறி) என விளம்புகைக்கு இணை ஆணையர் இடைக்கால உத்தரவிட்டார்கள். அதன்படி ”உயர்மட்டக் குழு” அமைக்க வேண்டும் என்ற மற்றொரு வழக்கு நிலுவையில் உள்ளது. அரசின் தனி கவனம் வேண்டும். “உயர்மட்டக்குழு” நியமிக்கும் பட்சத்தில் திருமதி இராமலெட்சுமி இளங்கோ அவர்கள் தொடுத்த வழக்கு வாபஸ் பெறப்படும்.

3. In Appointment of Trustees (5 Nos), இதற்கு சில வழிமுறைகள் குறித்து உயர்திரு. கமிஷனர் ஆணை உள்ளது. அதன் படி நியமித்தல்.

4. சமயத்தின் புனித அடையாளமான விபூதியை ஆசாரங்ககள் எதுவும் இல்லா இந்த வள்ளலார் நிலையத்தில் கொடுப்பதை நிறுத்துவதாக உறுதியளித்த உத்தரவு உள்ளது. விபூதிக்கு பதில், வரும் பக்தர்களுக்கு நாட்டு சர்க்கரையும், வெந்நீரும் கொடுத்தல்.

5. சங்கத்தின் சந்தா ரசிது பின்புறம் சங்கத்தாரின் தகுதிகளை அச்சடித்தல், ஆணைப்படி.

6. நிலையத்திற்காக உள்ள திட்டபதிவேடு (Scheme) வள்ளலாரின் முடிவான கொள்கையை கருத்தில் கொண்டு தயாரித்தல் அல்லது திருத்தம் செய்தல்.

7. வள்ளலாரின் தெய்வ நிலையங்களின் எல்லைக்குள் எந்த ஒரு சமயமத சடங்குகளை (மொட்டை அடித்தல், சூடம் ஏற்றல் உட்பட) அனுமதிக்கக் கூடாது என்ற ஆணையர்களின் ஆணை உறுதியாக அமுல்படுத்த வேண்டும்.

8. வெளியிடப்படும் உரை நடைப்பகுதி புத்தகத்தில் சமயமத பகுதிகளை நீக்குதல். சுத்த சன்மார்க்கம் சார்ந்த உபதேசங்கள் மட்டும் பதிக்கச் செய்தல்.

9. மற்ற கோயில்கள் போல் தினமும் சத்திய ஞானசபையை திறந்து வைத்தல், வள்ளலார் வகுத்த வழியில் ஜோதி வழிபாடு தினமும் நடைபெறல் வேண்டும். 28 பாசுரங்கள் (பாடல்கள்) - ஞானசரியை நான்கு விண்ணப் பங்கள், திரு அகவல் வாசிக்க ஆவணச் செய்தல்.

10. தைப்பூச விழாவில் 8 வாசலும் திறக்கப்பட வேண்டும். வட பெரு வெளியில் நின்று தென் வெளி நோக்கி வேண்ட வேண்டும். (அதற்கு தான் வடபுறம் பல ஏக்கர் இடம் அமைந்துள்ளது)

11. சென்னை தனியார் கல்வி நிறுவனத்திலுள்ள வள்ளலார் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் மற்றும் இடம் சம்பந்தமான ஆவணங்களை மீட்டல், எங்களின் கோரிக்கை நிலுவையில் உள்ளது.

12. முடிபான நெறி சுத்த சன்மார்க்கம் வள்ளலாரால் வெளிப்படுத்திய ஆண்டு சித்திரை 1,1871 ஆகும் (ஆதார அடிப்படையில்) இதை வெளிப்படுத்துதல் வேண்டும்.

13. வள்ளலார் ஆரம்பித்த "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்திற்கு", புதிய கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டு, மேலும் சிறப்பாக தொடர்ந்து நடத்துதல் வேண்டும்.

14. வள்ளலார் தனது மார்க்கத்திற்கென தனி கொடி கண்டுள்ளார்கள். அது சட்டப்படி பதிவு செய்திட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கனவே நிலுவையிலுள்ள கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

மேலும் சில

15. வள்ளலார் சாதி சமயம், மதம் பொய் என்று ஆசாரங்களை விட்டு ஒழித்து சுத்த சன்மார்க்கம் என்ற தனது முடிபான நெறியை கண்டதால் சுத்த சன்மார்க்க அடிப்படையில் அமைந்துள்ள திரு அகவல் மகா பேருபதேசம் நான்கு விண்ணப் பங்கள் மற்றும் ஆறாம் திருமறை அதிக அளவில் அச்சடிக்கப்பட்டு எப்போதும் கிடைக்கும் படியும் மற்றும் எல்லா ஊர்களில் புத்தக நிலையங் களிலும் கிடைக்கும்படி ஆவண செய்யப்பட வேண்டும்.
16. வள்ளலாரின் நிலைய சொத்துக்கள் பல ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும். பட்டா மாற்றி யுள்ளதை மீட்டல். கீழ் நீதிமன்ற தீர்ப்புகளின் மீது மேல் முறையீடுகள் செய்யப்பட வேண்டும்.
17. வள்ளலாரின் முடிபான சுத்த சன்மார்க்க கொள்கை குறித்து பாட நூல்களில் வர வேண்டும்.
18. திருவருட்பிரகாச வள்ளலார் கட்டளைப்படி சுத்தசன்மார்க்கப் பாடச்சாலை, திருவள்ளுவர் திருக்குறள் பாடச்சாலை அமைத்தல். சாகாகல்வி குறித்த விசாரம் மேற்கொள்ளுதல்.
19. மேலும், வள்ளலார் கண்ட மூலிகை அட்டவணை அடிப்படையில் மூலிகை பண்ணை மற்றும் ஆராய்ச்சி, வள்ளலாரின் ஆசையான ஏழை எளியவர்கள் பயன்பெறும் வண்ணம் மூலிகை மருத்துவ மனை அமைத்தல். உண்மையை தெரிவிக்கிறோம். விடியல் வேண்டும்.

# சர்வதேச மையம்

**(அரசுக்கு அனுப்பிய மனைவியின் நகல் - ஏ.பி.ஜெ. அருள்)**

வடலூரில் **அமையவுள்ள** வள்ளலார் பெயரில் "சர்வதேச மையம்" **வள்ளலாரின் முடிபான சுத்தசன்மார்க்க கொள்கை அடிப்படையிலேயே** கோரிக்கைகள் - விண்ணப்பித்து வேண்டுதல் -

**மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், மேதகு தமிழக அரசு. உயர்திரு ஆணையர் அவர்கள், இ.ச.அ. ஆட்சிதுறை, சென்னை. உயர்திரு இணை ஆணையர் அவர்கள், இ.ச.அ. ஆட்சிதுறை, விழுப்புரம்**

(திருவருட்பிரகாச வள்ளலாரின் சுத்தசன்மார்க்க நெறி மற்றும் மேதகு உயர்நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் ஆணையர்கள், இ.ச.அ. ஆட்சி துறையின் ஆணைகள் அடிப்படையிலே விண்ணப்பம்)

முன்பாக பணிவன்புடன் சமர்பித்து வேண்டுவது

19-ம் நூற்றாண்டில் திருவருட்பிரகாச வள்ளலாரால் கடவுளின் அருளால் உரைக்கப்பட்டு கண்டுகளித்த சுத்த சன்மார்க்க என்னும் தனி நெறி புதிய பொது மார்க்கம் மரணமில்லா பெருவாழ்வாகிய பெரும்பயன் இவற்றை தான் முடிவாக வெளிப்படுத்தி யுள்ளதாக அறிவிக்கிறார்கள். தான் வைத்திருந்த சமயப் பற்று மற்றும் உலக ஆசாரங்களை முற்றிலும் பற்றற கைவிட்டார்கள்.

சுத்த சன்மார்க்கம் என்றால் என்ன என்பதை தெரிந்துக்கொள்ள திருமதி ஏ.பி.ஜெ. அருள்

அவர்களின் தொகுப்பு ஒன்றை இங்கு தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

வடலூரில் அமையவுள்ள வள்ளலார் சர்வதேச மையம் வள்ளலாரின் முடிபான கொள்கையான “சுத்த சன்மார்க்கத்தின்” அடிப்படையிலேயே அமையும் என்பதில் மேதகு தமிழக அரசின் மீது நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

இந்நிலையில் மேற்படி அமையவுள்ள ‘சர்வதேச மையத்தில் (கட்டிடத்தில்)” இருக்க வேண்டியவை எவை என தங்களின் மேலான பார்வைக்கு சிலவற்றை பணிவுடன் வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

| வ. எண் | அமைக்கப்பட வேண்டியவை | அதற்கான ஆதாரங்கள் |
| --- | --- | --- |
| 1. | சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கத்தின் கீழ் சமரச சுத்த சன்மார்க்கப் பாடசாலை மற்றும் வகுப் பறைகள் மற்றும் வாசிப்பாளர்கள் நியமனம் | அறிவிப்பு நாள் 11-01-1872 (பெயர் மாற்றம் 18-07-1872) |
| 2. | திருவள்ளுவர் நூல் மற்றும் திருக்குறள் வகுப்பு | ஆன்மீக வழியில் வள்ளலார் ஒருவரே இவ்வகுப்பு நடத்தியுள்ளார்கள் மேலும் உரைநடை பகுதி : 411 |
| 3. | சாகா கல்வி நல்ல விசாரணை குறித்து ஆய்வுக்கூடம் மற்றும் வள்ளலாரின் தனி நெறி மற்றும் மரணமில்லா பெருவாழ்வு குறித்த ஆய்வு இருக்கைகள் | உ.ந. பகுதி பக்கம் 411 ரூ 438 |
| 4. | திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய மூலிகை அட்டவணை ஆய்வு மற்றும் ஏழை | உ.ந.பகுதி 311 |

| | | |
|---|---|---|
| | எளியவர்களுக்கான மூலிகை மருத்துவம். | |
| 5. | வள்ளலாரின் முடிபான சுத்தசன்மார்க்க நெறியில் அமையப்பட்ட உபதேசக் குறிப்புகள்இ திரு அகவல், நான்கு விண்ணப்பங்கள், சுத்தசன்மார்க்கப் பாசுரங்கள் (6வா திருவருட்பா) மற்றும் கட்டளைப்படி சமய ஸ்தோத்திரங்கள் நீக்கப்பட்ட திருவருட்பா பாடல்கள் கொண்ட நூலகம் மற்றும் வாசிப்பு அறை. (மற்ற எந்தொரு நூலும் கூடாது. | உ.ந.பகுதி பக்கங்கள் 418/400/410 |
| 6. | தமிழ்மொழியை பூரணமாக அறிய வகுப்புகள் மற்றும் நிகண்டு பயிற்சி | கல்வி பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் லேசுடையதாய் பாடுதற்கும் மதித்தற்கும் மிகவும் இனிமை உடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய் உள்ள மொழி "தமிழ்" உ.ந.பகுதி பக்கம் 304. |
| 7. | பொதுவான தேவையுள்ள இதர வசதிகள் கொண்ட அறைகள், அரங்கம் etc., | |

**அன்புடன் பணிவுடன் மேலான பார்வைக்கு வைத்து சமர்ப்பிக்கிறோம்.**

அடுத்து, எங்களது நீண்ட நாள் நிலுவையுள்ள கீழ்வரும் கோரிக்கைளை 'இதுவே நல்ல தருணம்' எனக் கருதி தங்களின் மேலான பரிசீலனைக்கு வைக்கிறோம்.

<u>கோரிக்கைகள் :-</u>

1. சத்திய ஞான சபை வழக்கு (அப்பில் இன்னும் நிலுவையில்) இது மிக முக்கியம், அரசு தனி கவனம் வேண்டும்.
2. தனி நெறி (உண்மை பொது நெறி) என விளம்புகைக்கு இணை ஆணையர் இடைக்கால உத்தரவிட்டார்கள். அதன்படி "உயர்மட்டக் குழு" அமைக்க வேண்டும் என்ற மற்றொரு வழக்கு நிலுவையில் உள்ளது, அரசின் தனி கவனம் வேண்டும். “உயர்மட்டக்குழு” நியமிக்கும் பட்சத்தில் திருமதி இராமலெட்சுமி இளங்கோ அவர்கள் தொடுத்த வழக்கு வாபஸ் பெறப்படும்.
3. In Appointment of Trustees (5 Nos), இதற்கு சில வழிமுறைகள் குறித்து உயர்திரு. கமிஷனர் ஆணை உள்ளது. அதன் படி நியமித்தல்.
4. சமயத்தின் புனித அடையாளமான விபூதியை ஆசாரங்ககள் எதுவும் இல்லா இந்த வள்ளலார் நிலையத்தில் கொடுப்பதை நிறுத்துவதாக உறுதியளித்த உத்தரவு உள்ளது. விபூதிக்கு பதில், வரும் பக்தர்களுக்கு நாட்டு சர்க்கரையும், வெந்நீரும் கொடுத்தல்.
5. சங்கத்தின் சந்தா ரசிது பின்புறம் சங்கத்தாரின் தகுதிகளை அச்சடித்தல், ஆணைப்படி.
6. நிலையத்திற்காக உள்ள திட்டபதிவேடு (Scheme) வள்ளலாரின் முடிவான கொள்கையை கருத்தில் கொண்டு தயாரித்தல் அல்லது திருத்தம் செய்தல்.
7. வள்ளலாரின் தெய்வ நிலையங்களின் எல்லைக்குள் எந்த ஒரு சமயமத சடங்குகளை (மொட்டை அடித்தல், சூடம் ஏற்றல் உட்பட) அனுமதிக்கக் கூடாது என்ற ஆணையர்களின் ஆணை உறுதியாக அமுல்படுத்த வேண்டும்.

8. வெளியிடப்படும் உரை நடைப்பகுதி புத்தகத்தில் சமயமத பகுதிகளை நீக்குதல். சுத்த சன்மார்க்கம் சார்ந்த உபதேசங்கள் மட்டும் பதிக்கச் செய்தல்.
9. மற்ற கோயில்கள் போல் தினமும் சத்திய ஞானசபையை திறந்து வைத்தல், வள்ளலார் வகுத்த வழியில் ஜோதி வழிபாடு தினமும் நடைபெறல் வேண்டும். 28 பாசுரங்கள் (பாடல்கள்) - ஞானசரியை நான்கு விண்ணப் பங்கள், திரு அகவல் வாசிக்க ஆவணச் செய்தல்.
10. தைப்பூச விழாவில் 8 வாசலும் திறக்கப்பட வேண்டும். வட பெரு வெளியில் நின்று தென் வெளி நோக்கி வேண்ட வேண்டும். (அதற்கு தான் வடபுறம் பல ஏக்கர் இடம் அமைந்துள்ளது)
11. சென்னை தனியார் கல்வி நிறுவனத்திலுள்ள வள்ளலார் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் மற்றும் இடம் சம்பந்தமான ஆவணங்களை மீட்டல், எங்களின் கோரிக்கை நிலுவையில் உள்ளது.
12. முடிபான நெறி சுத்த சன்மார்க்கம் வள்ளலாரால் வெளிப்படுத்திய ஆண்டு சித்திரை 1,1871 ஆகும் (ஆதார அடிப்படையில்) இதை வெளிப்படுத்துதல் வேண்டும்.
13. வள்ளலார் ஆரம்பித்த “சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்திற்கு”, புதிய கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டு, மேலும் சிறப்பாக தொடர்ந்து நடத்துதல் வேண்டும்.
14. வள்ளலார் தனது மார்க்கத்திற்கென தனி கொடி கண்டுள்ளார்கள். அது சட்டப்படி பதிவு செய்திட வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே நிலுவையிலுள்ள கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

மேலும் சில

15. வள்ளலார் சாதி சமயம், மதம் பொய் என்று ஆசாரங்களை விட்டு ஒழித்து சுத்த சன்மார்க்கம் என்ற தனது முடிபான நெறியை கண்டதால், சுத்த சன்மார்க்க அடிப்படையில் அமைந்துள்ள திரு அகவல், மகா பேருபதேசம் நான்கு விண்ணப்பங்கள் மற்றும் ஆறாம் திருமறை அதிக அளவில் அச்சடிக்கப்பட்டு எப்போதும் கிடைக்கும்படியும் மற்றும் எல்லா ஊர்களில் புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்படி ஆவண செய்யப்பட வேண்டும்.
16. வள்ளலாரின் நிலைய சொத்துக்கள் பல ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், பட்டா மாற்றியுள்ளதை மீட்டல். கீழ் நீதிமன்ற தீர்ப்புகளின் மீது மேல் முறையீடுகள் செய்யப்பட வேண்டும்.
17. வள்ளலாரின் முடிபான சுத்த சன்மார்க்க கொள்கை குறித்து பாட நூல்களில் வர வேண்டும்.
18. திருவருட்பிரகாச வள்ளலார் கட்டளைப்படி சுத்தசன்மார்க்கப் பாடச்சாலை, திருவள்ளுவர் திருக்குறள் பாடசாலை அமைத்தல். சாகாகல்வி குறித்த விசாரம் மேற்கொள்ளுதல்.
19. மேலும், வள்ளலார் கண்ட மூலிகை அட்டவணை அடிப்படையில் மூலிகை பண்ணை மற்றும் ஆராய்ச்சி, வள்ளலாரின் ஆசையான ஏழை எளியவர்கள் பயன்பெறும் வண்ணம் மூலிகை மருத்துவ மனை அமைத்தல். - தற்சமயம் முற்றும் ——

அன்புடன் பணிவுடன் சமர்பித்து நிறைவேற்ற
ஒருமித்து நின்று வேண்டுகிறோம்.
இங்ஙனம் APJ. ARUL

# வள்ளலாரின் "சுத்த சன்மார்க்கம்" 19ம் நூற்றாண்டில் வெளிப்படுத்தப்பட்ட தனிநெறி - புதிய மார்க்கம்

APJ. ARUL

வள்ளலார் சொல்கிறார்கள்

- சாதி சமயம் மதம் பொய்
- நாத்திகம் சொல்கிறவர்தம் நாக்கு முடை நாக்கு.

இந்நிலையில் வள்ளலார் கண்ட வழி புதிய வழியா? என கேட்க தோன்றும் காரணம், உலகில் வெளிப்பட்டிருக்கும் சாதிகள், சமயங்கள், மதங்களை பொய் என அறிவிக்கிறார். அப்படியெனில், நாத்திக கொள்கையா? என்றால் நாத்திகம் சொல்கின்றவர் தம் நாக்கு முடைநாக்கு என்கிறார்கள்.

ஆம் ஒரு புதிய கடவுள் கொள்கையை வெளிப்படுத்தி, உண்மை கடவுளின் நிலையை காணும், புதிய வழி ஒன்றை 1871-ல் வெளிப்படுத்தியவரே இராமலிங்கம் என்னும் வள்ளலார்.

## கடவுள் நம்பிக்கை - ஆன்மிகம்:-

கடவுள் நம்பிக்கை என்பது ஆன்மிகம் பொதுவாக: அண்டங்கள், உலகங்கள், உயிர்கள், பொருள்கள் மற்ற எல்லாவற்றையும் படைத்து, காத்து, அருளி வருபவர் / வரும் சக்தியே கடவுள்

"இக்கடவுள்"

- ஒருவர்/அல்லது பலர்/மற்றும் கடவுளின் குடும்பம்
- கடவுளுக்கு அவதாரங்கள்

உலகில் எந்தொரு சமய மதங்களிலும், அதன் முழு முதற்கடவுளை வெளிப்படையாக சொல்லாமல், குழு

உட்குறியாக, அதாவது வெளிப்பட புறங்கவிய சொல்லவில்லை என்கிறார் வள்ளலார்.

மேலும், அண்ட பிண்ட தத்துவங்களையும் (அண்ட வெளிப்பாடுகள், பிண்ட உறுப்புகள்) இவை தேவர்களாக, தெய்வங்களாக ஆக்கப்பட்டுள்ளது. அதன் குணாதிசியங்களில் மேலும் வெளிப்படுத்தி, ”அக்குணப பொருளிலேயே” ஆண்டவரை லட்சியம் செய்யும் சமய வழியிலும், மேற்படி ”சமய வழியிலேயே” அழுந்தி, அதனையும் கடந்து நிர்குண லட்சியவாதியாகிய மதவாதிகளாக மாறுதல் ஆகும்.

மேலும்,

- சாத்திரங்கள், சடங்குகள், ஆசாரங்களை பிரதானமாகக் கொண்டு கடவுள்களை வணங்குதல்/கட்டுப்படுத்துல்
- இறைவன் நிலை காண தவம், தியானங்கள் செய்தவர்களை தெய்வமாக்கி வணங்குதல் மற்றும் கடவுளரின் தூதுவர்கள் மற்றும் வானவர்கள்
- உண்மை என்ன? என்று உள்ளழுந்தி சிந்தித்து முடிவு காண முயலும் / வேதாந்தி சிந்தாந்தி) அவர்களையும் வணங்குதல

ஆக,

- உருவமாக,
- ஆச்சாரமாக,
- சாதாரண யோக நிலையில்,
- குணத்தின் பொருளறிவில் லட்சியம் கொண்டு, (”சமயமாக”)
- மேலும், அதிலேயே நிர்குண லட்சியம் கொண்டு (“மதமாக”) கொள்ளுதல்.

- இதுவே இன்றைய ஆன்மீக கொள்கைகளும் வெளிப்பாடுகளும் எனலாம்.

**<u>நாத்திகம் - கடவுள் மறுப்பு :-</u>**

மேற்படியாக சொல்லப்பட்டவையை மறுத்து, அப்படி எதுவும் உருமாக, ஒளியாக, சக்தியாக, என ஏதேனும் ஒன்றோ அல்லது பலவோ உலகில் எங்கும் இல்லை. கடவுள் என எதுவுமில்லை என்பதே இங்கு ”நாத்திகம், எனலாம் ஒருவாறு.

**<u>விஞ்ஞானம் :-</u>**

இயற்கையும் அவ்வியறக்கை தனக்கென விதிகளின் அடிப்படையிலும் உலகங்கள் உள்ளதே உண்மை என்பது இன்று அறிவியலார் திரு.ஹாக்கிஸ் ஸ்டிபன் வரை உள்ள பொதுவான கூற்று.

**<u>சுத்த சன்மார்கம்:-</u>**

இவ்வாறாக உள்ள உலக சமய, மத மார்க்கங்களின் அனுபவங்களை மற்றும் நாத்திக் கொள்கையை மறுக்க வந்ததே எனது சுத்த சன்மார்க்க அனுபவம் என்கிறார் வள்ளலார்.

தனது வழியில் கண்ட ”உண்மை”, உலகில் உள்ள எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக விளங்கும் என்கிறார்.

சமய சாத்திர, புராணங்களில் வந்ததாக சொல்லப்பட்டுள்ள கர்த்தர்கள், மூாத்திகள் தேவர்கள் யோகிகள், ஞானிகள் கடவுளர்களை லட்சியம் கொள்ளவில்லை. மேற்படி வெளிப்பட்டுள்ள தெய்வங்கள் மறுக்கப் படுகிறது. சுத்த சன்மார்கத்தில் வெளிப்பட்டது ”**தனி கடவுள்**” என்கிறார் வள்ளலார்.

மேலும், எந்தொரு வகை ஆச்சாரங்களிலும், சாதாரண யோக முறைகளிலும் லட்சியம் கொள்ளவில்லை. ஒரு புதிய வழிபாடு முறை கண்டார்.

மேலும், உலக சமய மத மார்க்கங்கள் மற்றும் அதன் ஆசார சங்கற்க விகற்பங்கள் சுத்தசன்மார்க்கத்திற்கு எக்காலத்தும் எவ்விடத்தும் முக்கிய தடைகளாகவே அறிவிக்கிறார் வள்ளலார். உலக ஆசாரங்களும் மனதில் பற்றக் கூடாது என்கிறார்.

**தனிநெறி:**

இங்கு ”கடவுள் கொள்கை” என்ன?

**எல்லாமாகிய தனிப்பெருங்கருணைக் கடவுளே**

எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியார்களாக்கி, உண்மையறிவை விளக்கி, உண்மையின்பத்தை அளித்து, சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்து, சத்திய வாழ்வை அடைவித்து, நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும் (விண்ணப்பம் எண்.1)

**நம்பிக்கை:-**

ஆண்டவர் ஒருவர் உள்ளார் என்றும், அவர் பொதுப்பட உலகத்திலுள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும்பயன் பெற்று நித்திய வாழ்வு வாழ்தற் பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனர் என்றும், அதிகாலையில் நாமும் ஆன்ம லாபத்தைப் பெற்றுக் கொள்ளுவோம் எனவும் நம்புதல் வேண்டும் (25-11-1872 பத்திரிகை).

(இயற்கை உண்மை இயற்கை விளக்கம் இயற்கை இன்பம் இவையின் உண்மை, கடவுளின் உண்மை ஆகும். உண்மையை இறைவனே வந்து தெரிவிக்க வேண்டும் என விண்ணப்பித்து முயற்சிப்பது, இதில் நம்பிக்கை எனலாம்).

# விருப்பம் - காலம் காணாது -அக அனுபவம்

## விருப்பம்:-

வள்ளலார் சுத்த சன்மாாக்கத்தை கண்டதே தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கே. அவ்விருப்பம் யாதெனில்:

"இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைய தாகிய தேகத்தைப் பெற்ற யான் இத் தேகத்தில் இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தித்து இத் தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டும் என்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது."

மேற்படி விருப்பத்தை உலகில் உள்ள சமய மத மார்க்கங்களில் நிறைவேற்றி கொள்ள முடியாது. காரணம், "மரணம்" சமய மதங்களில் ஏற்கப்படுகிறது. துன்பம், பிணி ஊழ், கன்மம் வினையில் மரணம் வரும் என்கிறது. மரணத்திற்கு பின், பாவம் புண்ணியத்தால், நரகம் சொர்க்கம் எனவும், கடவுள் அருளால், மரணத்திற்கு பின் சுவன வாழ்க்கை உண்டு என, உலக முன்னனி சமய மதங்களில் உள்ளது.

## காலம் காணாது:-

இயற்கை உண்மை, இயற்கை விளக்கம், இயற்கை இன்பம்

இவை குறித்த உண்மையை நம் அறிவால் தெரிந்து அறிந்து அனுபவிக்க இந்தப் பிறவியில் "காலம் காணாது"

என்கிறார். ஆனால் அண்டதிறங்கள் அனைத்தும் அறிய ஆசை என்கிறார்.

எனவே இறைவனிடமே, உண்மையை தெரிவிக்க வேணுமாய், ஒழுக்கம் நிரப்பி, கருணை அறிவால் உண்மையை வேண்டி நிற்கும் ஒரு புதிய வழியில் வள்ளலார் முயற்சிக்கிறார்கள்.

**அக அனுபவம்:-**

தோன்றும் அறிவு, தோற்றுவிக்கும் அறிவு, பதியறிவு என்ற அடிப்படையில் அகத்திலே அனைத்து உண்மையையும் கடவுளால் தெரிவிக்கப்பட்டு விளக்கப்பட்டு கண்டு வைக்கப்படுகிறது என்று தனது அக அனுபவத்தை உலகத்தாருக்கு தெரிவிக்கிறார்கள்.

அடுத்து,

**வழிபாடு கடவுள்**

உயிர்களின் அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே இம்மனித தேகத்திற் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும் சிசுப் பருவத்திலும் குமாரப் பருவத்திலும் பல வேறு அவத்தைகளால் அறிவின்றியிருந்தோமாகலில், தேவரீர் பெருங் கருணைத் திறத்தை யறிந்து கொள்ளாமல் வீண்போது கழித்தோம். அப்பவருங்கழிய இப்பருவத்தினிடத்தே, எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்றையெல்லா வற்றையும் தோற்றுவித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும், எங்கும் பூரணராகி விளங்குகின்ற **ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மைன்பாற் கருத்திற்**

**கருதி வழிபாடு செய்யின்** அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத் திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல் கூடுமென்றும், எங்கள் அறிவில் **தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம்.**

**முக்கிய லட்சியம்**

"தெய்வத்தைப் புறமுகமாகப் கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்" என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப் பட்டுக் கொண்டே இருந்தேன்", இருக ˙கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்து கொள்ள வில்லை யென்றால், ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்தப் பதார்த்ததினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தால்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. **ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற முக்கிய லக்ஷியத்திலிருந்து கொண்டு விசாரஞ் செய்து கொண்டிருங்கள்.**

**விசாரம் என்னும் நன்முயற்சி (பயிற்சி):-**

எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால்

நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்கு மேல் நம்மை அதிக்ஷ்டிகின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது.

இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாயிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை முதலில் நீங்கி விடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும்.

இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும் இவ்வண்ணமாக, இருக்கின்ற போதும் படுக்கின்றபோது இடைவிடாது இவ்விசாரத்தோடு **ஆண்டவர் நமக்குண்மை தெரிவிக்க வேண்டுமென்கின்ற முயற்சியுடனிருந்தால் தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.**

## மற்ற மார்க்கங்கள் மற்றும் சாதனங்கள் குறித்து

- சுத்த சன்மார்க்கத்திற்கு சமயமத மார்க்கங்கள் அல்லாதனவே அன்றி இல்லாதன வல்ல.
- சுத்த சன்மார்க்கத்திற்கு பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம் (அந்நியமல்ல).
- எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும எல்லா மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாய் சுத்த சன்மார்க்கம் விளங்கும்.
- சுத்த சன்மார்க்கத்திற்கு சமய மத மார்க்கங்கள் அதன் ஆசார சங்கற்ப விகற்பங்கள் எக்காலத்தும் முக்கியத்தடைகளாக உள்ளது.

## சுத்த சன்மார்க்க ஒழுக்கம்:-

"இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை.

யாதெனில், இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப் பற்றுக்

களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தை யதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை".

**சுத்த சன்மார்க்கத்தின் தகுதிகள்:-**

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடையாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள். மரணம், பிணி, மூப்பு, பயம் துன்பம் - இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள்.

**சுத்த சன்மார்க்கத்தின் சாதனம் "கருணை" விருத்திக்கு தடைகள்:-**

**எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே** இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லஷியமாகிய ஆன்மநேய ஒருமைபாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

## சுத்த சன்மார்க்கத்தின் முடிவு

சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவ னல்லன். **சாகாதவனே சன்மார்க்கி.**

## சுத்த சன்மார்க்கத்தின் மரபு நான்கு

**சாகாத கல்வியே** கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வ நட ராஜபதியே.

## சுத்த சன்மார்க்கத்தில் வள்ளலார் பெற்ற பயன்:

சாகா வரம், தனி வடிவம், மரணமிலா பெருவாழ்வு. தான் பெற்ற பெரும் பயனாகிய ஒளிதேகத்தில் 30-01-1874-ல் வடலூர் மேட்டுக்குப்பம், சித்திவளாகத்தில் வெளிப்பட்டார்கள்.

**பாடல்கள்:-**

**ஆராலும்** அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
சித்திபுரத் தமுதேஎன் நித்திரைதீர்ந் ததுவே.

**காற்றாலே** புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே.

## தனிநெறி - பாடல்கள்

தருணம்இஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
**தனிநெறி** உலகெலாம் தழைப்பக்
கருணையும் சிவமே பொருள்எனக் கருதும்
கருத்தும்உற் றெம்மனோர் களிப்பப்
பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருள்நயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.
சிதத்தொளிர் பரமே பரத்தொளிர் பதியே
சிவபத அனுபவச் சிவமே
மதத்தடை தவிர்த்த மதிமதி மதியே
மதிநிறை அமுதநல் வாய்ப்பே
சதத்திரு நெறியே **தனிநெறித்** துணையே
சாமியே தந்தையே தாயே

புதப்பெரு வரமே புகற்கருந் தரமே
பொதுநடம் புரிகின்ற பொருளே.

## <u>மேலும் பாடல்களில் சில :-</u>

## <u>பிள்ளைப் பெரு விண்ணப்பம்</u>

திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்**மொழி**ப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்**மொழி**ப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்**மொழி**ப் பொருளும்
மருவிஎன் உளத்தே நம்பிநான்
இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்.

## <u>பிள்ளைச் சிறு விண்ணப்பம்</u>

**சரியைஓர்** நான்கும் கிரியைஓர் நான்கும் சாற்றிடும் யோகமோர்
நான்கும்
புரியவும் பதங்கள் பொருந்தவும் எனது புந்தியில் ஆசைசற் றறியேன்
பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை பெற்றிலேன் முத்திபெற்
றிடவும்
உறியதோர் இச்சை எனக்கிலை என்றன் உள்ளம்நீ அறிந்ததே எந்தாய்.

## <u>அருட்பெருஞ்ஜோதி அகவல்</u>

**பற்றுக** ளனைத்தையும் **பற்ற**றத் தவிர்த்தென
தற்றமு நீக்கிய வருட்பெருஞ் ஜோதி


## <u>உளம் புகுந்த திறம் வியத்தல்</u>

**பற்றி**யபற் றனைத்தினையும் **பற்ற**றவிட் டறிவாம்
பான்மைஒன்றே வடிவாகிப் பழுத்தபெரி யவரும்
உற்றறிதற் கரியஒரு பெருவெளிமேல் வெளியில்
ஓங்குமணி மேடைஅமர்ந் தோங்கியசே வடிகள்
பெற்றறியப் பெயர்த்துவந்தென் கருத்தனைத்துங் கொடுத்தே
பிறவாமல் இறவாமல் பிறங்கவைத்தாய் அரசே
கொற்றமுளேன் தனக்கிதுதான் போதாதோ கொடியேன்
குடிசையிலும் கோணாதே குலவிநுழைந் தனையே.

## அனுபவ மாலை

எவ்வுலகில் எவ்வௌர்க்கும் அரும்பெருஞ்சோ தியரே
இறைவர்என்ப தறியாதே இம்மதவா திகள்தாம்
கவ்வைபெறு குருடர்**கரி கண்ட**கதை போலே
கதைக்கின்றார் சாகாத கல்விநிலை அறியார்
நவ்விவிழி யாய்இவரோ சிலபுகன்றார் என்றாய்
ஞானநடம் கண்டேன்மெய்த் தேன்அமுதம் உண்டேன்
செவ்வைபெறு சமரசசன் மார்க்கசங்கந் தனிலே
சேர்ந்தேன்அத் தீமொழியும் தேமொழிஆ யினவே.

## சுத்த சன்மார்க்கக் தனி கொடி



மார்க்கத்திற்கென தனிக்கொடி வள்ளலார் கண்டுள்ளார்கள். கால் பங்கு பொன் (மஞ்சள்) முக்கால் பங்கு வெண்மை. கருணை இதழ் பதிப்பாசிரியர் திருமதி. இராமலெட்சுமி இளங்கோ அவர்கள் மேதகு இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் அரசுகளுக்கு வள்ளலார் கண்ட கொடியை பதிவு செய்து, வேறு எவரேனும் பயன்படுத்த அனுமதிக்க கூடாது எனவும் மனு செய்து உள்ளார்கள். பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. நமது தெய்வ நிலைய நிர்வாகம் முன் வந்து ஆவன செய்ய வேண்டும்.

அன்புடன்:
கங்காதரன், திருச்சி.

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# அனைவருக்கும் இனிய
# 2022
# தைப்பூச திருநாள் வாழ்த்துகள்

**இதழுக்கான சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :**

**Bank : S.B.I.,**
**Othakadai, Madurai -625 107**
**in favour of KARUNAI**
**A/c No. : 31599470881**
**Branch Code 2246**
**IFSC Code: SBIN0002246**

**நெறி பரப்பும் பணிக்கு உதவுங்கள்.**

**Bank I.O.B.,**
**Arignar Anna Nagar, Madurai-20.**
**in favour of KARUNAI SABAI SALAI TRUST**
**A/c. No. 06510100031157**

# www.atruegod.org

***Website :***

M/s. **Karunai Sabai Salai Trust, Madurai.**
**Mrs. V. Ramalakshmi Elango**
**Founder**

RNI : TNBIL/2010/34670/ENGTAM/M

## வள்ளலார் பெயரில்
## சர்வதேச மையம் அமைக்க உத்தரவு மற்றும்
## அக்டோபர் 5, தனிப்பெருங்கருணை தினம்
## என அறிவித்த

மாண்புமிகு உயர்திரு. முதலமைச்சர்
**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்,
மேதகு தமிழகஅரசு மற்றும் இ.ச.அ.ஆ.துறை
அமைச்சர் மாண்புமிகு உயர்திரு. **சேகர்பாபு,**
திரு ஆணையர், திரு இணை ஆணையர்
ஆகியோருக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

❖ கருணை சபை சாலை, மதுரை.
❖ அருள் அறக்கட்டளை, தண்ணீர் பந்தல்.
❖ வள்ளுவர்-வள்ளலார் மன்றம், குறிஞ்சிப்பாடி.
❖ வள்ளலார் இயற்கை அறிவியல் மையம், மதுரை
❖ வள்ளலார் மன்றம், திருச்சி.
❖ ஒளி நெறி இயக்கம், திருச்சி.
❖ VUSSSF, VADALUR.

அமையவுள்ள மையம் வள்ளலாரின் முடிபான
சுத்த சன்மார்க்க நெறி அடிப்படையில் மட்டுமே.
கோரிக்கை உள்ளே. ➡

Published and owned by Mrs. **E. Ramalakshmi,** M.A., and
published from Karuani Sabai Salai Trust, “Grace Hall”
34, Poombukar Nagar North Extension, Uthankudi,
Madurai-625 107 and printed by Mr. **RM. Saravanan,**
**at M/s. Alamelu Printing Press & Screen,**
**No. 1, Chellathamman Kovil Street, Madurai-1.**
Editor : **A.G. Chandramohan,** Cell : 94420-38770